தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
(கணக்கு பிரிவு)

அனுப்புநர்
வா.உமாமகேஸ்வரி, B.Com., ACMA.,
தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்/வருவாய்,
144, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

பெறுநர்
அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்,
மின்விநியோக வட்டங்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.

கடித எண்.தநிக அ/வரு/நிக அ/வரு/துநிக அ/வரு/க அ/வரு/கோ.உத்தரவுகள்/எண்.566/17, நாள் 02.08.17

ஐயா/அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் – அட்டைப்பட்டியல் பணித்தொகுப்பு – மத்திய அலுவலக கணக்கீட்டு அலுவலர்களின் கடமைகளும் பொறுப்புகளும் – மிக கவனமாகப் பின்பற்றுதல் – சம்பந்தமாக.

பார்வை:
1. (Per) FB/TANGEDCO Proceedings No.8, dt. 23.01.2014.
2. Lr.No.CFC/FC/R/AO/Rev/D /14, dt. 25.06.2014.
3. Lr.No.CFC/R/EA/D /2015, dt. 09.09.2015.
4. Lr.No.CFC/REV/FC/REV/AO/REV/F.Rev.Aug./D.508/17, dt. 12.07.2017.

= = = = =

பார்வை 1–ன்படி அட்டைப்பட்டியல் பணித் தொகுப்பில், மத்திய அலுவலக, கணக்கீட்டு அலுவலர்களின் கடமைகளும் பொறுப்புகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக பார்வை 2 முதல் 4 வரை உள்ள கடிதங்கள் வாயிலாக உத்தரவுகளும், வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும், தலைமை அலுவலகத்திற்கு வருகின்ற ஆய்வு அறிக்கைகளை சீராய்வு செய்யும் பொழுது வரையறுக்கப்பட்ட பணிகள் சரிவர செய்வதில் சில குறைபாடுகள் இருப்பதை அறிய நேரிடுகிறது.

எனவே, மேற்கண்ட பணிகளை கவனமாக கணக்கீட்டு அலுவலர்கள், மத்திய அலுவலகத்திலும், பிரிவு அலுவலகங்களிலும், மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள இடங்களிலும் மற்றும் பொதுவாக மேற்கொள்ள வேண்டிய கடமைகளும், பொறுப்புகளும், வாரியத்தில் வருவாய் இழப்பைத் தவிர்க்கவும், கூடுதல் வருவாய் ஈட்டவும் உதவியாக இருக்கும் வகையில் கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

## மத்திய அலுவலகத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

1. மின் கணக்கீடு மற்றும் வசூல் தொடர்பாக மின்நுகர்வோரிடமிருந்து வரும் குறைகள், புகார்கள், கடிதங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
2. மின்நுகர்வோர், உயர் அலுவலர்கள், பிரிவு அலுவலர்களுடன் கடிதத் தொடர்புகள் மேற்கொள்ளுதல்.
3. பிரிவு அலுவலகங்களில் கணக்கீட்டாளர்களைச் சுழற்சி கால முறையில் மாற்றம் செய்தலை கண்காணித்து அந்த விவரத்தை மேற்பார்வை பொறியாளருக்கு தெரியப்படுத்துதல்.

4. அரசு மற்றும் உள்ளாட்சி மின் இணைப்புகள் தவிர, பணம் செலுத்தத் தவறிய இதர மின் இணைப்புகளை கவனித்து மின்துண்டிப்பை உறுதி செய்தல்.

5. திரும்பிய காசோலைக்கான தொகை அபராதத்துடன் வசூல் செய்வதை உறுதி செய்தல்.

6. மின் கணக்கீடு மற்றும் பண வசூல், கணினியில் சரியாகப் பதிவாகியுள்ளதை சரிபார்த்தல்.

7. மின் கணக்கீட்டில் கண்டுபிடிக்கப்பட்ட குறைவான தொகையினை அடுத்த மாத கணக்கீட்டில் சேர்த்து வசூல் செய்ய ஏற்பாடு செய்தல்.

<u>பிரிவு அலுவலகத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள்</u>

1. வசூலிக்கப்பட்ட பணம் முறைப்படி வங்கியில் செலுத்தப்பட்டுள்ளதை வங்கி சான்றுச்சீட்டுடன் சரிபார்த்தல்.

2. மீதமுள்ள பணம் பத்திரபடுத்துவதை உறுதி செய்தல்.

3. பழுதான மின்மானி விபரங்கள் எழுதப்பட்டிருக்கும் பதிவேட்டினை சரிபார்த்தல்.

4. பழுதான மின்மானி உடனடியாக மாற்றப்படுவதை உறுதி செய்தல்.

5. வங்கியில் பணம் செலுத்திய சான்றுச் சீட்டு **(Chalan)** மற்றும் வசூல் ஆவணங்கள் வருவாய்ப்பிரிவுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படுவதை உறுதி செய்தல்.

6. **L.T.C.T.** மின் இணைப்புகளில் வீதப்பட்டி **(Tariff)**, பெருக்கும் காரணி **(M.F/P.F)**, இழப்புக் கட்டணம் **(Compensation Charges)** முதலியவை சரியாக விதிக்கப்படுவதை உறுதி செய்தல்.

<u>மின் இணைப்பு உள்ள இடம்</u>

1. தோராயமாக சில மின்இணைப்புகளில் மின்மானி, வெள்ளை அட்டை, கணினி ஆகியவைகளுடன் ஒப்பிட்டு மின்கணக்கீட்டை சரிபார்த்தல்.

2. மின் துண்டிப்பு செய்யப்பட்ட சில மின்இணைப்புகளில் சோதனை ஆய்வு மேற்கொண்டு இறுதி மின் அளவை **(FR)** சரிபார்த்தல்.

3. ஏதேனும் பழுதடைந்த மின்மானிகள் சிலவற்றில் கணக்கீட்டினை சோதனை ஆய்வு மேற்கொள்ளுதல்.

4. ஒரே முகவரியில் ஒரே பெயரில் வழங்கப்பட்டுள்ள மின் இணைப்புகள் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய வழிகாட்டுதலின்படி வழங்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்தல்.

<u>பொதுவானவை</u>

1. ஓராண்டிற்குள் வட்டத்திலுள்ள அனைத்து பிரிவு அலுவலகங்களிலும் ஆய்வு செய்யும் திட்டம் வகுத்து, அதில் குறைந்தபட்சம் மாதத்தில் 15 நாட்கள் பிரிவு அலுவலகம்/மின் இணைப்புள்ள இடங்களை ஆய்வு செய்ய வழிவகை செய்திட வேண்டும். இவைகளை உள்ளடக்கி மாதாமாதம் பயணத்திட்டம் தயாரித்து துணைநிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் ஒப்புதல் பெற வேண்டும். நகலினை மேற்பார்வை பொறியாளர் பரிசீலனைக்கு அனுப்பிட வேண்டும்.

2. ஒவ்வொரு மாத ஆய்வு அறிக்கையையும் அடுத்த மாதம் 5–ம் தேதிக்குள் மேற்பார்வை பொறியாளருக்கு சமர்ப்பித்திட வேண்டும்.

3. கணக்கீட்டு அலுவலர்கள் பணிகளை மேற்பார்வை பொறியாளர் அவ்வப்போது சீராய்வு செய்து நிர்வாகம் அறிவுறுத்தியுள்ள வகையில் பணியாற்றிட அறிவுறுத்திட வேண்டும்.

4. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினுடைய வருவாய் பெருக்கத்திற்கு மேலே கூறியிருக்கும் கடமைகளையும், பொறுப்புகளையும் எவ்வித குறையும் இன்றி கணக்கீட்டு அலுவலர்கள் செவ்வனே பின்பற்றிட வேண்டும் என்று மேற்பார்வை பொறியாளர்கள் அறிவுறுத்திட வேண்டும்.

(ஒம்/– 05.08.2017)
தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்/வருவாய்.

நகல்:
தலைமை பொறியாளர்கள்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:
இயக்குநர் (நிதி), இயக்குநர் (பகிர்மானம்).
மேற்பார்வை பொறியாளர்/மின் வாரியத்தலைவர் அலுவலகம்.